பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (07-04-1996) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 132

# அரசின் படை நடவடிக்கையை எதிர்த்து
# மனித சங்கிலிப் போராட்டமும் ஊர்வலமும்

சாவகச்சேரி, ஏப்ரல் 7

ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ள திட்டமிட்டிருக்கும் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தக் கோரி தமிழ் மக்களின் ஏகோபித்த குரலை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் மனித சங்கிலிப் போராட்டமும், ஊர்வலமும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் நடைபெறவுள்ளன.

நேற்றுக் காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெற்ற வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டது.

இந்தப் போராட்டம் தொடர்பான மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைத்து மக்களையும் இணைந்து ஸ்ரீலங்கா அரசின் உத்தேச இராணுவ நடவடிக்கைக்கு எதிரான தமிழ் மக்களின் ஏகோபித்த உணர்வை வெளிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. (உ-7)

# படையினரின் சம்பளத்தை இரண்டு மடங்காக்க முயற்சி!

## கட்டாய இராணுவ சேவையை ஏற்படுத்தவும் அரசு ஆலோசனை

கொழும்பு, ஏப்ரல் 7

புதிதாக இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் முயற்சி வெற்றியளிக்காததை அடுத்து —

சிங்கள இளைஞர்களை இராணுவ சேவைக்குக் கவரும் விதந்தில் இராணுவத்தினரின் சம்பளத்தை இரட்டிப்பாக அதிகரிப்பதற்கு அரசு ஆலோசிப்பதாகத் தெரிய வருகின்றது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை கட்டாய இராணுவ சேவைக்கு உட்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வருவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகின்றது.

பி.பி.ஸியின் சிங்கள சேவையில் செய்தியாளர் அமல்ஜெயசிங்க இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

இராணுவத்துக்கு ஆள் சேர்க்க அரசு எடுத்த முயற்சி எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. உள்ள வெற்றிடங்களுக்கு 60 வீதமான அளவுக்கே விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல பகுதிகளில் மோதல்

சாவகச்சேரி, ஏப். 7

நேற்று முன்தினம் வலிகாமத்தில் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## கிழக்கில் வாகனங்கள் கடத்தல்

கொழும்பு, ஏப். 7

மட்டுநகருக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த இரண்டு இ. போ. ச. பஸ்கள், வாழைச்சேனை ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான பஸ் ஒன்று, தனியார் பஸ் ஒன்று ஆகியவையும் மற்றும் சில லொறிகளும் ஆயுதபாணிகளால் கடந்த இரண்டொரு தினங்களில் கடத்தப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளே இவற்றைக் கடத்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (உ-7-8)

## கட்டைக்காட்டில் புலிகள் தாக்குதல் 2 சிப்பாய்கள் பலி; எண்மர் காயம்

### 3 போராளிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் காலை 9. 40 மணியளவில் கட்டைக்காடு இராணுவ முகாமில் இருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆழியவளைப் பக்கம் முன்னேறிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டு இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் போராளிகளான கப்டன் துவேசன், லெப்டினன்ட் கோமகன், வீரவேங்கை சிவபெருமான் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இத்தாக்குதலில் ஒரு ஏ.கே. ரகத்துப்பாக்கியை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

சுமார் மூன்று மணி நேரம் அப்பகுதியில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-6-7-13-36)

## வலிகாமத்தில் வீரமரணம்

சாவகச்சேரி, ஏப். 7

வலிகாமத்தில் கடந்த செவ்வாய் கிழமை ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதல் ஒன்றில் கப்டன் கோபி (வேலாதயும்புஸ்மாலா — மாலா, திருகோணமலை) வீரமரணமடைந்தார்.

கடந்த 28 ஆம் திகதி சுழிபுரம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்த மேஜர் சுகுணன் (குகேந்திரன் — திருகோணமலை) வீரமரணமடைந்தார். (உ-3)

## பருத்தித்துறை துறைமுகத்தை கைப்பற்றுவதே அரசின் திட்டம்!

கொழும்பு, ஏப். 7

வடமராட்சியைக் கைப்பற்றுவதே இராணுவத்தின் உத்தேசமாகும்.

— பிரபல செய்தியாளர் அமல் ஜெயசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத — குடாநாட்டுப் பகுதிகளுக்கு— பருத்தித்துறை துறைமுகம் ஊடாகவே உணவு மற்றும் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

எனவே அந்தத் துறைமுகத்தை இராணுவம் கைப்பற்றுமாயின் அது இராணுவ ரீதியில் அரசுக்கு பெருவெற்றியாகவும் பயனுடையதாகவும் அமையும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கிலும் நேற்று ஷெல் தாக்குதல்

செம்பியன் பற்று, ஏப். 7

வெற்றிலைக் கேணி இராணுவ முகாமில் இருந்து நேற்று மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதல்களையடுத்து மருதங்கேணி, வந்திரான், தாளையடிப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினமும் மக்கள் குடியிருப்புக்கள் மீது அகோர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தொடரும் ஷெல் தாக்குதலால் வடமராட்சி கிழக்கில் பதற்றம் நிலவுவதாகவும் —

மக்கள் கையில் எடுத்த பொருள்களுடன் தொடர்ந்து இடம் பெயர்ந்து வருவதாகவும் —தெரிவிக்கப்பட்டது. (உ-3-36)

## வலிகாமம் பகுதியிலிருந்து நேற்றும் ஷெல் தாக்குதல்

### கைதடியில் பெண் காயம்

சாவகச்சேரி, ஏப். 7

வலிகாமம்பகுதியில் இருந்து நேற்று காலை முதல் வடமராட்சி,தென்மராட்சி பகுதிகள் நோக்கி அகோர ஷெல் தாக்குதல் மேற்கொல்லப்பட்டது.

நேற்றுக் காலை 11 மணியளவில் படையினரால் ஏவப்பட்ட எட்டுக்கும் மேற்பட்ட ஷெல்கள் கைதடி மேற்கு ஊரியான் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

ஊரியான் பகு[...] மார் கோவிலுக்கு அருகி[...] வீழ்ந்து வெடித்த ஷெல்[...]னால் திருமதி. தியாகராச[...] இராஜேஸ்வரி (35 வயது) என்ற பெண் காயத்துக்குள்ளாகி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் சுமார் 10 ஆடுகள் இறந்தன. பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை துறைமுகத்தில் நீரடி உளவுச் சாதனம்

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கெனப் பொருத்தப்படவுள்ள நீரடி உளவு சாதனத்தை திருகோணமலைத் துறைமுகத்திலும் பொருத்துவதற்கான நட்வடிக்கைகளை கடற்படை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

வெடிப் பொருள்களுடன் துறைமுகத்துள் நுழையும் கடற்புலிகளின் நடமா[...]களைக் கண்டறிய இக்கருவி பெரிதும் உதவும் என்றும்—

உலகின் முக்கிய துறைமுகங்கள் அனைத்திலும் இக்கருவி பொருத்தப்பட்டுள்ள போதிலும் சிறிலங்காவில் பொருத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும் என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-10)

## 94 ஜூலைக்குப் பின் சம்பள உயர்வு பெறாத அரச ஊழியருக்கு 100ரூபா

### இடைக் காலக் கொடுப்பனவுப்படி

1994 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் எதுவித சம்பள உயர்வும் பெறாத அரச ஊழியருக்கு 1996 ஜனவரி 15 ஆம் திகதி தொடக்கம் இடைக் காலக் கொடுப்பனவுப் படியாக நூறு ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுப்படி எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 250 ரூபாவாக அதிகரிக்கப்படும் என அரச பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''[...]மின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. [உ-6-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய வயலின், உருத்திர வீணை, Two in one (National Panasonic), கலர் ரெலிவிஷன் Sony 14'', Singer 20'', சைக்கிள், மைக்ரோ கசட், ரெக்கோடர், நுளம்புவலை இன்னும் பல விற்பனைக்கு. தொடர்பு:- நாகேந்திரன், கந்தசாமி கோவிலடி, கெருடாவில், சாவகச்சேரி.
(41417)

மிகவும் சிறந்த நிலையில் உள்ள ''வில்லியஸ்'' நீர் இறைக்கும் இயந்திரம், நஷனல் பனசோனிக் Two in one, Sony 20'' நிற T. V., புதிய Olimpia ஆங்கில தட்டச்சு, Raleigh ஆண்கள் சைக்கிள், சிறிய சைக்கிள், கம்பளம் 2''x10'' ஒரு காருக்குத் தேவையான கதவு Beading ... நாகராசா, அதிபர், ... வாழ்க'' மட்டுவில் தெற்கு. ...ரஸ்வதி வித்தியாலயம் ...ன்பாக)
(41335)

புதிய சிங்கர் குளிர் சாத...ப் பெட்டி (இரண்டு கதவு...ன்) இறக்குமதி செய்யப்பட்... தொடர்பு கொள்ள ...ண்டிய முகவரி: க. தியா...ராஜா, கணேசன் வீதி, மட்...வில் மேற்கு, சண்டி வீதி, ...ணாவில்.
(41340)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ...ம்லர், தண்ணீர் ரம்லர், ...ஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் ...ய்கள், சில்வர் றே, கறி ...ளிகள், கறி டிஸ்கள், பந்...பாய், கிடாரங்கள், சமை...பாத்திரங்கள், தண்ணீர் ...் இன்னும்பல. வெள்ளை ...ரிகை, ...ரிய அரசடி, ...க...
(41147)

## பசு விற்பனை

ஒரு பசு மாடு விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் கீழ்க்காண் முகவரியில் பசுவைப் பார்வையிட்டு கூறுவிலையை 10-4-96ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்ம், பருத்தித்துறை வீதி, காடிகாமம்.
(சி-4170)

## கணிதம் O/L

95, 96 பரீட்சைகளில் Credit, Distinction பெறு பேறடைய துரித மீட்டல் 20 பாடத் திட்டங்கள் மூலம் யாழ். மத்திய கல்லூரியின் கற்றல் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். B. Sc. ஆசிரியர், மே/பா சரவணமுத்து கமலாச்சி, வேதனப்பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி.
(41336)

## தேவை

ஹோர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும். சோழன் வெற்றுப்பொருள் வாணிபம், யாழ்சாலை, சாவகச்சேரி.
(41274)

நல்லின கறவைப் பசு தேவை. விற்க விரும்புபவர்கள் பின்வரும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இனம், பாலின் அளவு, வயது, எத்தனையாவது ஈற்று, கடைசியாக ஈன்ற திகதி: பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
(சி-4169)

## ...ண்டு - 5 புலமைப் பரிசில் '96

...இற்சி - 03 (விடைகளுடன்)

...-96 முதல் எல்லா புத்தகசாலைகளிலும் பெறலாம்.
பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விசேட கழிவு.
விவரங்களுக்கு:

**BOND**
த. பெட்டி: 140, யாழ்ப்பாணம்.
(41339)

## எம். கே. எஸ். வைத்தியசாலை

3 ஆம் கட்டை கே. கே. எஸ். வீதியில் இயங்கியது.
தற்பொழுது
யாழ். வீதி, கிளிநொச்சியில்
சிவா வர்த்தக நிலையம் அருகில் இயங்குகிறது.
டாக்டர் மு. கனகசபை
(40494)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திரு. சி. பற்குணம்

இலங்கை நிர்வாக சேவை பிரதிப் பிரதம செயலாளர், கைத்தொழிலமைச்சு வடக்கு கிழக்கு மாகாணசபை.

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியும், கால் நூற்றாண்டு காலமாக பல்வேறு பதவிகளை அலங்கரித்து, மக்கள் நயக்கும் பணி புரிந்து புகழ் பெற்றவரும், உயர்ந்த இலட்சிய நோக்குடன் வாழ்ந்தவருமான எமது சகோதர அதிகாரி, அமரர் திரு. சி. பற்குணம் அவர்களுக்கு எங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள்,
யாழ். மாவட்டம்.

...யலகம்,
யாழ்ப்பாணம்.
05- 04- 1996
(C/4173)

---

தென் இந்திய திருச்சபை
யாழ். பேராயம் ஆதரவில்
அங்கிலிக்கன், மெதடிஸ்த, தென்னிந்திய
திருச்சபை ஒன்றிணைந்து வழங்கும்

## வெறுமையில் புதுவாழ்வு "கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை"

செய்தி:- வண S. S. கருணைராஜன்.
(வடக்கு, கிழக்கு மெதடிஸ்த சபா சங்கத் தலைவர்)

இடம்:- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
(திறந்த வெளியரங்கு)

காலம்:- **07 - 04 - 1996** பி. ப. **4**- மணி.
பிரவேசம் இலவசம்

வண. P. R. அநுகூலன்
(41426)

---

யாழ். றோட்டறிக் கழகமும்
பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண
சாரதா சேவாச்சிரமமும்
இணைந்து நடத்தும்

## இலவச கண் சிகிச்சை முகாம்

காலம்: இன்று **7-4-96** காலை 8-30 மணி
இடம்: சேவாச்சிரமம்

முக்கிய குறிப்பு:
3-4-96 இல் பதிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் இம்முகாமில் பரிசோதிக்கப்படுவர்.

— செயலாளர்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
(சி-4171)

---

## சுந்தரவேல் வைத்தியசாலை

மல்லாகம், சாவகச்சேரி கனகம்புளியடிச்சந்தி ஆகிய இடங்களில் இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலை 04- 04- 96 முதல் யாழ். வீதி கிளிநொச்சியில் சிங்கள பாடசாலை முன்பாக இயங்கிவருகிறது.

டாக்டர் ஈ. சுந்தரேஸ்வரன்
(40493)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை கருணாநிதி

(Rapid Results Institute - கொழும்பு - யாழ். நிர்வாகி CIMA விரிவுரையாளர்)

மலர்வு: **05- 01- 1946**
உதிர்வு: **07- 04- 1994**

எங்களின் உன்னத வாழ்விற்காக உழைத்த உங்கள் நினைவுகளுடன் இனியும் எங்கள் காலங்கள் நகரும்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி:- க. தயாநிதி
பிள்ளைகள்:- க. காண்டீபன்
க. கார்த்திகா
க. காவேரி
க. ஐஜன்

212, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(40415)

---

மாகாண சபைகள் விவகாரம்:

## ஆளுநர்களின் கோரிக்கை உயர்நீதிமன்று நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 7
வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைகள் கலைக்கப்பட்டமை செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக செய்யப்பட்ட அப்பீல் விசாரணை தீர்ப்பு வரும்வரை இந்த இரு மாகாண சபைகளும் தொடர்ந்து இயங்கக் கூடாது என்று இடைக்காலத் தடையொன்றை பிறப்பிக்குமாறு கோரி அந்த இரு மாகாணசபைகளின் ஆளுநர்களும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

வடமத்திய மாகாண ஆளுநர் மைத்திரிபால சேனநாயக்கா, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சாலியா மத்தியூ ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

## தமிழ்ச் சங்க கூட்டம்

கிளிநொச்சி, ஏப். 7
கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. சி. கந்தசாமி தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''சங்கம் வளர்த்த தமிழ்'' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.
(உ-3)

---

# மரண அறிவித்தல்கள்

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

(ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆசீர்வாதம் வீதியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கிளிநொச்சியில் வசிப்பவருமாகிய சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்) கொழும்பில் காலமானார்.

இவர் மேரி கபிரியேலாவின் அன்புக் கணவரும், இராஜநாயகம் (கனடா), திரேசா சிறியபுஸ்பம் (ஆசிரியை — அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்), மதுரநாயகம் (கனடா), மலிஸ்ரெலா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, டோமினிக், அல்பிரட் (சாமுவேல் அன் சன்ஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரசாந், பிரவீந், டென்ஷியா, ஜெரின்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 06 - 04 - 96 அன்று கொழும்பில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மேரி கபிரியேலா
(மனைவி)

இல. 26/01,
திருவையாறு,
கிளிநொச்சி.
(C/4172)

## திருமேனி பாலசுப்பிரமணியம்

(பிரபல சோதிடர்)

கடையிற்சுவாமி வீதி நிராவியடியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமேனி பாலசுப்பிரமணியம் (சோதிடர்) அவர்கள் நேற்று (6-4-96) காலமானார்.

இவர் கமலத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீரங்கநாதன், இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), நாகேஸ்வரன் (இந்தியா), துரைசிங்கம் (S. M. T. ஓமான்) திருமதி சரஸ்வதி, ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீரஞ்சினி (U K) ஆகியோரின் தந்தையும், மாலினி, கௌரி, சாவித்திரி, ராதா, ஓங்காரமூர்த்தி (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி). அன்பரசி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (6-4-96) மாலை நான்கு மணிக்கு நடைபெற்றன, இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எல். ஓங்காரமூர்த்தி
(மருமகன்)
தீ. துரைசிங்கம்
(மகன்)

தற்காலிக முகவரி:
C/O புஸ்பராஜா ஆசிரியர்
'கணேச வாசா'
ஸ்ரேஷன் முன் வீதி,
கண்டி வீதி, கொடிகாமம்.
(41428)

## திருமதி ஞானம்மா சின்னத்தம்பி

உடுவில் கிழக்கை வசிப்பிடமாக கொண்ட திருமதி சி. ஞானம்மா நேற்று (6- 4- 96) கைதடி வயோதிபர் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்- முத்துப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், அச்செழுவை சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பியின் (மலேசியா), அன்பு மனைவியும், சகுந்தலாதேவியின் பாசமிகு தாயாகும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (Burma), சரஸ்வதி, மற்றும் சிவபிரகாசம் (முன்னாள் உப- அதிபர், கொக்குவில் புகையிரத நிலையம்) ஆகியோரின் சகோதரியும், சிதம்பரநாதனின் (மலேரியா தடுப்பு இலாகா உத்தியோகத்தர்- தர்மபுரம்) மாமியாரும், மயூரன், நிருஜா, நிசாந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7-4-96) காலை 9-00 மணியளவில் கைதடியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சிவபிரகாசம் (சின்னன்னை)
(சகோதரன்)

கைதடி.
(41427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வாய்ச்சொல் பயன் தருமா?

மத்திய அரசின் மூலம் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்துவிட்டனர். இராணுவத்தின் மீதும், பொலிஸ் மீதும் அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

இராணுவத்தினர் எவ்வளவு அன்பாகப் பேசினாலும் தமிழர்கள் அவர்களைக் கண்டவுடன் ஒதுங்கவே செய்வர்.

இந்த நிலையில் வடக்கிற்கு மின்சாரம் வழங்கியோ, பாதைகளை அமைத்தோ [illegible]தப் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது.

தமிழர்களின் சரியான நிலைப்பாட்டை அறிந்தவர் உணர்ந்தவர்போல இவ்வாறு கூறியிருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தான்!

சந்திரிகா தாம் கூறுவதை உண்மையிலேயே உணர்ந்திருப்பின் —

தமிழர்களின் இந்த நிலைப்பாட்டுக்கு முற்றிலும்மாறாக, எதிர்வளமாகச் செயற்படுவது ஏன்? — என்ற கேள்வியே தமிழ் மக்கள் மனங்களில் எழுகிறது.

இராணுவத்தைக் கண்டால் தமிழர்கள் ஒதுங்கி விடுவார்கள் என்பதனை அறிந்த சந்திரிகா —

தமிழர் பிரதேசங்களை இராணுவத்தைக் கொண்டு ஆக்கிரமித்து தமிழரின் மனங்களை வெல்லலாம் என்று நினைத்துப் போரை நடத்துவது ஏன்?

வலிகாமத்துக்கு மின்சாரம் வழங்குவதாலோ, பாதைகளை அமைப்பதாலோ தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது தெரிந்து கொண்டும் —

அங்கு மின்சாரம் வழங்குவதாகவும், வீடுகளைப் புனரமைப்புச் செய்வதாகவும், வீதிகளை அமைப்பதாகவும் கூறி அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியிருக்க அழைப்பது என்ன [illegible]ருத்தம்?

[illegible]சால்வது ஒன்று செய்வது [illegible]தற்கு எதிர்மாறானது என்ற போக்கினால் உருப்படியாக எதனையும் ஈட்ட முடியாது.

நீண்ட காலமாக நாட்டை வாட்டும் இனப்பிரச்சினை விவகாரத்திலும் சந்திரிகா இதே போக்கைக் கடைப்பிடித்தால் அதன் விளைவு பாரதூரமானதாகவே சேரும்.

கொழும்பில் இருந்து ஆட்சி செய்யும் அரசில் (மத்திய அரசில்) தமிழர்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று கூறும் ஜனாதிபதி —

தமிழர்கள் தமக்கென ஓர் அரசை நிறுவுவதற்கு தமது தீர்வு யோசனையில் எந்த வசதியும் செய்யாமல் இருப்பது ஏன்?

ஜனாதிபதி தாம் கூறியதை [illegible]தார உணர்ந்து பேசியிருந்தால், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று உளமார விரும்பினால்—

போரை உடனடியாக நிறுத்தவேண்டும். தமிழர் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படைகளையும் பொலீஸாரையும் முற்றாக விலக்க வேண்டும். தமிழர்களின் தன்னாட்சிக்கு, தனியரசுக்கு வகை செய்யும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும்.

அதற்கான அரசியல் நேர்மையும், விசுவாசமும், திறமையும் அவருக்கு உண்டு என்று நம்பமுடியவில்லையே!

வேளைக்கு வேளை வெவ்வேறு விதமாக வாய்ச்சொல்லாடி ஆகப்போவது எதுவுமில்லை!

# பொலிஸாரைத் தாக்கியதற்காக
# 10 சிப்பாய்களுக்குப் பிடிவிறாந்து

கொழும்பு, ஏப். 7

கடந்த மாதம் 25 ஆம் திகதி அலரி மாளிகைக்கருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டு, அவரது கடமையைச் செய்யவிடாமல் தடுத்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் பத்து இராணுவத்தினரையும் கைதுசெய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் மணிலால் வைத்திய திலகா பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

இந்தவழக்கு வியாழனன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் நீதிமன்றில் இந்த 10 இராணுவத்தினரும் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்தே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிளை கடமை செய்யவிடாது இராணுவத்தினர் தடுத்தனர் என்றும்—

பிஸ்டல் ஒன்றினால் சுட்டுக்கொல்லப் போவதாக பயமுறுத்தினார்கள் என்றும்—

அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள் என்றும் — கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த இராணுவ லெப்டினனன்ட் ஒருவர் பின்னர் பிணையில் விடப்பட்டிருந்தார். (இ-3)

### தீர்வு யோசனைகளில் உள்ள
## சர்ச்சைக்குரிய விடயங்கள் அடுத்த வாரம் ஆராய்வு

கொழும்பு, ஏப். 7

அரசின் தீர்வு யோசனைகளில் சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து அடுத்த வாரம் கூடும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராயப்படவிருப்பதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்களில் சர்ச்சைக்குரிய அம்சங்களாக இருக்கும் காணி, பொலீஸ் நிர்வாகம் குறித்தே அடுத்த அமர்வில் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப். 7

கிளிநொச்சியில் உள்ள ஒலி, ஒளி அமைப்பாளர்கள், நாதஸ்வர, தவில் கலைஞர்கள், கிறிஸ்தவ, இந்து ஆலய சபைத் தலைவர்கள், ரி.வி., டெக் உரிமையாளர்கள், வெளிப்பட, வீடியோ அமைப்பாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வன்னி கலை, பண்பாட்டுக்கழகம் கேட்டுள்ளது. (இ-3)

## ஈஸ்டர் பஜனை

தென்னிந்திய திருச்சபை பேராயத்தின் சபைகள் ஒன்றிணைந்து வழங்கும் ''வெறுமையில் புதுவாழ்வு'' என்னும் ஈஸ்டர் பஜனை இன்று பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறும். (உ-3)

## நிதித்துறை அறிவித்தல்
## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 7ஆம் திகதி—நாளை 8 ஆம் திகதி, காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறைகோரி உள்ளது.

★ சண்முகராசா ராசமணி அல்லது விஜயராணி — வங்களா வீதி, மீசாலை மேற்கு.
★ வேலுப்பிள்ளை கந்தசாமி — மிருசுவில் வடக்கு.
★ முத்தையா தங்கவேல் — மே/பா K. பாலகிருஸ்ணன், எழுதுமட்டுவாள் தெற்கு.
★ பரமேஸ்வரி நவரட்ணம் — மே/பா சிவசம்போ, மீசாலை.
★ சின்னத்துரை சிறீதரன் — மே/பா மாணிக்கம் கந்தசாமி, இலங்கேஸ் வீதி, மீசாலை.
★ விசாலாட்சி வேலுப்பிள்ளை — கற்குழி, சாவகச்சேரி.
★ இளையதம்பி சிவசம்பு — சாவகச்சேரி, வரணி.
★ கந்தையா அன்னப்பிள்ளை — மந்துவில், (புதுரோட்).
★ கணபதி கந்தையா — கோல்ட் சிமித் ஒழுங்கை, மட்டுவில் வடக்கு.
★ வேலுப்பிள்ளை கந்தையா— மீசாலை மேற்கு.
★ இராமநாதர் சோதிலிங்கம் — மீசாலை வடக்கு.
★ சின்னத்தங்கச்சி செல்லையா — மே/பா அ. தவயோகராசா, மந்துவில் கிழக்கு.
★ கந்தாமி ஸ்கந்தராஜா — கோவிலாக்கண்டி, கைதடி.
★ சி. பாலகிஸ்ணன் — நுணாவில் மேற்கு.
★ க. சிவயோகநாதன்—கணேசன் ஒழுங்கை, நுணாவில் மேற்கு.
★ T. சுந்தரலிங்கம் — மே/பா அருந்தவகுமார், மீசாலை வடக்கு.
★ மகேஸ்வரி குகநாசன் —''வாசுகி'', மட்டுவில் அம்மன் கோவில், சாவகச்சேரி மேற்கு.
★ ரஞ்சினி துரைராசா அல்லது மீராதுரைராசா — வரணி, கொடிகாமம்.
★ அருட்பிரகாசம் செந்தில்நாதன் — கல்வயல், சாவகச்சேரி.
★ தவமணி சின்னையா — மே/பா அன்ரன் ஜெயராஜசிங்கம், புகையிரத நிலைய வீதி, மிருசுவில்.
★ பாலசிங்கம் பூபாலசிங்கம் — ஓட்டுவெளி, மிருசுவில்.
★ நடராசா சிறீரஞ்சன் — சிவபூதவராயர் கோவில், நுணாவில்.
★ பொன்னையா ராசரத்தினம் — மே/பா நடேசபிள்ளை, டச்சு வீதி, கேணியடி, மீசாலை மேற்கு.
★ க. இராமலிங்கம் — எழுதுமட்டுவாள் வடக்கு.
★ கனகசபை பொன்னுச்சாமி — நுணாவில் தெற்கு.
★ கெங்கேஸ்வரி சிவப்பிரகாசம் — மே/பா, சி. அப்புலிங்கம், மீசாலை கிழக்கு.
★ கந்தையா கணபதிப்பிள்ளை — மே/பா ப. முருகேசு, முரளி வீதி, நுணாவில் மேற்கு.
★ உமையவல்லி பொன்னுத்துரை—மே/பா ந. தங்கமலர் சிவன்கோவில் வீதி, மட்டுவில் தெற்கு, சந்திரபுரம்.
★ பரமேஸ்வரி ஆறுமுகம் —''ஐயாகடையடி'', மீசாலை தெற்கு.
★ லீலாவதி துரைச்சாமி—'லீலா பவனம்'', மீசாலை தெற்கு.
★ பரமேஸ்வரி தம்பிஐயா — விடத்தல்பளை, மிருசுவில்.
★ சரோஜாதேவி இராசரத்தினம்—மே/பா இளையதம்பி செல்வராசா, கச்சாய் தெற்கு.
★ சரஸ்வதி கதிரவேலு—கல்வயல் வீதி, சாவகச்சேரி
★ தம்பையா மகாலிங்கம் — மே/பா பொ. கந்தசாமி, அல்லாரை வடக்கு.
★ குமாரசாமி [illegible] — மே/பா V. [illegible]லோகநாதன், உசன்.
★ சின்னத்தம்பி சிவநாதன் — இத்தியடிப்பிள்ளையார் கோவிலடி, தட்டாதெரு, சங்கத்தானை.
★ தவமணி சின்னத்துரை — கேரதிவு வீதி, தனங்கிளப்பு.
★ செல்லத்துரை விஜயகுமார் — மே/பா S. செல்வரட்ணம், றெட்பானா, மிருசுவில்.
★ மேரி புவிராஜசிங்கம் அல்லது கோபாலகிருஷ்ணன் — நுணாவில்.
★ ருக்மணி பஞ்சலிங்கம் - மே/பா T. சின்னத்தம்பி மட்டுவில் தெற்கு,
★ நாகமணி ராஜரத்தினம் — சின்னமறவன்புலவு, குளத்தடி பிள்ளையார் கோவிலடி, சாவகச்சேரி.
★ சிவசக்தி சண்முகம் — மே/பா V. சின்னராசா, மீசாலை வடக்கு
★ கணபதிப்பிள்ளை ராசநாதன்—இல 57, 'மங்கள வாசம்', கண்டி வீதி, சாவகச்சேரி.
★ கந்தன் நல்லையா — மே/பா K. செல்வராஜ், மூகமாலை வடக்கு,
★ ஆறுமுகம் பைரவி — மே/பா K. பபா, (காங்கேசன் துறை), முருகன் காட்வெயர் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி.
★ செல்லர் தம்பிராசா — ஆயத்தடி, மிருசுவில்.
★ நவரத்தினம் கணேசபிள்ளை — பெருங்குளம் றோட், தபாற் கந்தோர் றோட், பெருங்குளம் சந்தி.
★ செல்லப்பா சின்னத்துரை — மே/பா கனகசபை, நுணாவில் மத்தி.
★ தம்பிப்பிள்ளை குமாரசாமி— மே/பா வேலாயுதம், 190 மைல் போஸ்ட், நுணாவில் மேற்கு.
★ கணபதிப்பிள்ளை பொன்னம்மா — படித்த மகளிர் திட்டம், ப. நோ கூ. சங்கம், மிருசுவில்.
★ பரமேஸ்வரி பாலசுரேன் — இல. 18/3, ஆஸ்பத்திரி முன் றோட், கோவில் குடியிருப்பு, சாவகச்சேரி.
★ சுப்பிரமணியம் சிவபாக்கியம் — சேணியடி றோட், மீசாலை தெற்கு.
★ சற்குணதேவி நடராசா — மே/பா கந்தையா சண்முகநாதன், பழைய பாடசாலை, கல்வயல்.
★ சிதம்பரி தங்கவேல் — மே/பா முருகநாதன் கொடிகாமம், மிருசுவில்.
★ பத்மாவதி சுந்தரலிங்கம் — கற்குழி, சாவகச்சேரி.
★ ராசமியம்மா தர்மராஜ் — தவசிக்குளம், மிருசுவில்.
★ செல்லம்மா சின்னையா — மே/பா பொன்னம்பலம் தில்லையம்பலம், கைதடி தெற்கு.
★ சின்னத்துரை நேசன் — உசன் I. M. S. தேவாலயம், உசன்.
★ மேரி சொபியா விஸ்வலிங்கம் மே/பா M. ஸ்ரான்லி, எழுதுமட்டுவாள், [illegible]னாவி.
★ மகேஸ்வரி சுந்தரம்பிள்ளை — A. B. C. ராமவில், மீசாலை வடக்கு.
★ வல்லிபுரம் பஞ்சரத்தினம் — A. B. C. ராமவில், மீசாலை வடக்கு.
★ முருகேசு பாலசிங்கம் அல்லது முத்தாபரணம் பாலசிங்கம் — ஸ்டேசன் றோட், சாவகச்சேரி.
★ சின்னத்தம்பி அம்பிகைபாகன் அல்லது மகேந்திரன் — மீசாலை மேற்கு.
★ தில்லையம்பலம் செல்வரத்தினம் — மே/பா S. ரஞ்சிதமலர், மிருசுவில் வடக்கு.
★ நடராசா தங்கம் அல்லது நடராசா தையல் — மே/பா செல்லத்துரை, சரசாலை.
★ சித்ரா திருநாவுக்கரசு அல்லது பவானி இராஜசிங்கநாயகம் — பொற்கொல்லர் தெரு, சங்கத்தானை.
★ வைத்திலிங்கம் வேலுப்பிள்ளை (தவம்) அல்லது [illegible] தேவி விஜயரட்ணம் — மே/பா T. சபாரட்ணம், சரசாலை றோட், மட்டுவில்.
★ ஜெயசீலி சுவக்கின் — தவசிக்குளம், மிருசுவில்.
★ வேலுப்பிள்ளை கந்தசாமி — பாலையடி விநாயகர் கோவிலடி, மீசாலை தெற்கு.
★ சிவபாக்கியம் தருமலிங்கம் — அம்மன் கோவிலடி, மட்டுவில் (பலாலி கிழக்கு வசாவிளான்).
★ நடேசபிள்ளை சிவநாதன் — தாவடி தெற்கு.
(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஈஸ்ரர் கலை மாலை"

புனித காணிக்கை மாதா இளைஞர் கழகமும் அருட் தந்தை லொறட் ஞாபகார்த்த இடம்பெயர்ந்த இளைஞர் கழகமும் ஒன்று சேர்ந்து நடத்தும் "ஈஸ்ரர் கலை மாலை" நிகழ்வுகள் எதிர்வரும் **10 - 04 - 96** புதன்கிழமை மாலை 7.15 மணிக்கு தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலய முன்றலின் நடைபெறும்.

பங்குத் தந்தை,
மிருசுவில்

(41429)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பு பிரான்சிஸ்கா

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

29/53, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், சற்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொண்ட திருமதி சின்னப்பு பிரான்சிஸ்கா ஓய்வு பெற்ற ஆசிரியர் [சற்கோட்டை றோ. க த. க. பாடசாலை] 06 — 04 — 94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் சின்னப்புவின் [சற்கோட்டை றோ. க. த. க. பாடசாலை] அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் T. W. ராஜேந்திரத்தின் அன்புச் சகோதரியும், கருணைரட்ணம் [ஆஸ்திரேலியா], Dr. ராஜகுலேந்திரன் [பேராசிரியர் ஆஸ்திரேலியா], மரியரட்ணம் [மலாயன் பேக்கரி உரிமையாளர் யாழ்ப்பாணம்], திருமதி. யோகேந்திரன் றஞ்சிதறட்னி, ஜீவரட்ணம் [புதிய எருசலேம் தேவாலயம்], ஞானவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி மாக்கறேட் [ஓய்வு பெற்ற தபாலதிபர், ஆஸ்திரேலியா], ஜஸ்மின் மல்லிகா [B. Sc, ஆஸ்திரேலியா], காலஞ்சென்ற கிறிஸ்ரி ஜொயிசி, க. யோகேந்திரன் [கட்டடப் பரிசோதகர் புகையிரதத் திணைக்களம், வவுனியா], லிசியா, கிறிஸ்ரி ஜோய், கிறிஸ்ரி எல்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இதய ஜனனி, கவிதா, கஜன், பெனிற்றன், மியூறின், சிந்துஜா, பெனி நிரோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக, தற்காலிக வதிவிடமாகிய மணியகாரன் சந்தி, நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை இல்லத்தில் 07-04-96 அன்று பி. ப 2 மணி வரை வைக்கப்பட்டு அதன் பின்னர் அவரது பிறப்பிடமாகிய சற்கோட்டை இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆராதனைக்காக பி. ப 4. 00 மணியளவில் புனித சவேரியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின் புனித சவேரியார் ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

மணியகாரன் சந்தி,
நெல்லண்டை,
பருத்தித்துறை.

(40414)

# பொலீஸ் நிலையத்தில் பெயர் பதியும் விவகாரம் நீதிமன்றுக்கு வருகிறது

## முஸ்லிம் சட்டத்தரணி அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஏப். 7

"பொலீஸ் நிலையத்தில் பெயரைப் பதிவு செய்யவில்லை" என்பதற்காக தம்மை அழைத்துச் சென்று தடுத்து வைத்தது சட்ட விரோதம் என்று தெரிவித்து தெகிவளைப் பொலிஸாருக்கு எதிராக சட்டத்தரணியான ஆதம் லெப்பை மொகமட் பாருக் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இவரின் மனுவை நீதியரசர்கள் டாக்டர் அமரசிங்க, திரரட்ன, விஜேதுங்க ஆகியோர் விசாரணைக்கு ஏற்று ஜூலை மாதம் 15 ஆம் திகதி விசாரணை நடக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

தெகிவளை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலீஸ் மா அதிபர், சட்ட மா அதிபர் ஆகியோர் இம் மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் வந்த பொலீஸார் தமது அடையாள அட்டையைப் பரிசோதித்துவிட்டு, வீட்டையும் சோதனை செய்து, பொலீஸ் நிலையத்தில் பதியவில்லை என்று கூறி தம்மை ஜீப்பில் அழைத்துச் சென்று தடுத்து வைத்தனர். நண்பகல் 12 மணியளவில் விடுவித்தார்கள். இதனால் தமக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதுடன் தமது கௌரவத்திற்கு இழுக்கு ஏற்பட்டிருப்பதாக மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

தமக்கு 2லட்சம் ரூபா நஷ்டஈடு பெற்றுத் தரவேண்டும் என்றும் அவர் தமது மனுவில் கோரியுள்ளார். (உ-3)

## ஆசிரியர் கல்வி பயிற்சி நெறி விவரம்

கல்விக் கல்லூரிகளில், ஆசிரியர் கல்வியில் உயர் தொழில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 25 வயதுக்கு குறைந்ததாக இருக்கவேண்டும் என்பதே சரியானதாகும். 25 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும் என்று நேற்றைய உதயனில் வெளிவந்தது தவறாகும்.

கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதி சம்பந்தமான அரசாங்க அறிவித்தலை—

சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சியில் உள்ள உதயன் கிளை பணிமனைகளில் இன்று முதல் பார்வையிடலாம். (அ)

## வலயம் இரண்டு அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கள் காலை 9 30 மணிக்கும்—

ஊர்காவற்றுறை, வேலணை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய் காலை 9.30 மணிக்கும் —

சாவகச்சேரி கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் அன்று பிற்பகல் 2.30 மணிக்கும் — சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் திரு. இ' சிவானந்தன் அறிவித்துள்ளார்.

ஆண்டு 6 தொடக்கம் 11 வரை பாடசாலைகளில் அனுமதி பெற்றுள்ள மாணவர் விவரங்களை எடுத்து வருமாறு அதிபர்களிடம் அவர் கேட்டுள்ளார். (இ-3)

## விறகு வெட்ட சென்றோர் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஏப். 7

மணலாறு மாவட்டம் கல்யாணபுரம் கிராமத்தில் இருந்து கடந்த வியாழக்கிழமை விறகு சேகரிக்க சென்ற கிராமவாசிகள் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு கிராமவாசிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த இருவர் பதவியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-7-8)

## தொலைக்கல்வி செயலமர்வு

வடமராட்சி, ஏப். 7

1993 — 95, 94 — 96 ஆம் ஆண்டுகளின் தொலைக் கல்விப் பயிலுநர் ஆசியர்களுக்கான செயலமர்வு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[அ-173)

## இரு சடலங்கள் கரை ஒதுங்கின

செம்பியன்பற்று, ஏப். 7

வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர்கோவில் கடற்கரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டு சடலங்கள் கரை ஒதுங்கின.

இச்சடலங்கள் இரண்டும் வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் விடுதலைப் புலிகள் கடற்படையினர்மீது நடத்திய தாக்குதலில் கொலையுண்ட கடற்படைச் சிப்பாய்களினதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

நீல நிற உடுப்புகளுடன் காணப்பட்ட இச் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன.

[அ-36]

## உலக சுகாதார தினம்

கொழும்பு, ஏப். 7

உலக சுகாதார தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படவிருக்கிறது.

"நல் வாழ்வுக்கான சுகாதார நகரங்கள்" என்ற பதம் உலக சுகாதார நிறுவனத்தினரால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் பிற்றர் ஹப்சியர் தெரிவித்தார். (உ-3)

## ஒருவர் பலி

மட்டக்களப்பு வவுணதீவில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ரெலோ உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

[உ-3]

பருத்தித்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பருத்தித்துறை துறைமுகம் அமைந்துள்ள வடமராட்சி பகுதி மீது புதிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

— இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-6)

படையினரின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் எழுந்துள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்காக —

இராணுவத்தினரின் சம்பளத்தை இரட்டிப்பாக்கி சிங்கள இளைஞர்களைக் கவருவது, கட்டாய இராணுவ சேவையை ஏற்படுத்துவது ஆகிய யோசனைகளை அரசு ஆலோசித்து வருகின்றது.

யுத்தம் மேலும் சில வருடங்கள் நீடிக்குமாயின் அரசுக்கு இந்த இரண்டு வழிகளைத் தவிர வேறு மார்க்கம் இல்லை.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-6)

வலிகாமம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் இருந்து மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை — நண்பகல் 1. 45 மணியளவில் இப்பகுதி ஊடாக குண்டு வீச்சு விமானமும், ஹெலிகொப்டரும்சென்றதால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

வடமராட்சியில் தொண்டமானாறுப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அதேவேளை—

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வலி-கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் நேற்று காலையில் கேட்ட வண்ணம் இருந்தன.

(உ-3-8-15-13-154-173)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்


# மகா நதியின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

பார்த்தால் வாங்குவீர்கள் வாங்கினால் திருப்தியடைவீர்கள்

சுப முகூர்த்தங்களுக்கேற்ப
★ பட்டுப் புடைவைகள் ★ பட்டு வேட்டிகள் ★ மைசூர் சில்க்
★ காஷ்மீர் சில்க் ★ யோஜெட் சாறி வகைகள்

ஆடவர் மெருகிற்கு மெருகூட்டும்
★ விதவிமான டிசைன்களில் T சேட் ★ செக்சேட் வகைகள்
★ ரவுசர் துணிகள்

கன்னியர் கண்கவர்
★ ஸ்கேட் அன் பிளவுஸ் ★ கவுண் ★ பஞ்சாபி வகைகள்

சின்னஞ்சிறு கண்மணிகளுககு
★ வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட T சேட் ★ சூட்
★ றெடிமேட் கவுண் ★ ஸ்கேட் பிளவுஸ் வகைகள்

அனைத்திற்கும்

# மகாநதி புடைவை அகம்

இல. 04, சிறப்பு அங்காடி, சாவகச்சேரி.

(சி-4174)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 07-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org